IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,

THIRUMANGALAM.

O.S.No.100/2018

DEPOSITION OF WITNESS (DW3)

பி.வா.சா. 3 சாட்சி குணசேகரன் த.பெ.ராமகிருஷ்ணன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 05.11.2024 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்திற்கு வழக்கறிஞருக்கு நான் தான் விபரம் சொன்னேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தில் வாதி சங்கத்தின் செயலாளர் பாதர்வெள்ளை என்பதை நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். நான் சீதாலட்சுமி மில்லில் எந்த வருடத்தில் இருந்து வேலை பார்த்தேன் என்றால் 1970 முதல் 1992 வரை வேலை பார்த்தேன். அவ்வாறு நான் வேலை பார்த்ததற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் வாதி சங்கத்தில் சீதாலட்சுமி மில் கிளைச்சங்கத்தில் எந்த காலத்திலும் உறுப்பினராக இருந்தததில்லை என்றால் சரிதான். என்னுடைய பிறந்த தேதி 30.03.1953 ஆகும். எனக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் 26.10.1979 ஆகும். எனது பேரில் சொத்து எதுவும் கிரையம் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. எனக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் ஆவார்கள் அவர்களில் முதல் மகன் பிறந்த தேதி 4.2.1981 மற்றும் இரண்டாவது மகனின் பிறந்த தேதி 6.4.1983 ஆகும்.

3. தாவாச் சொத்து நான் சார்ந்திருக்கும் தமிழ்நாடு டிரேடு யூனியன் சங்கத்திற்காக கிரையம் வாங்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி சங்கத்திற்காக தாவாச் சொத்து 9.9.1981ல் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெற்று சுமார் 43 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். வாதி சங்கத்திற்கு தாவாச் சொத்து கிரையம் வாங்கப்பட்ட தேதி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் இராமச்சந்திரன் என்னிடம் சொன்னார்.

4. 9.9.1981 கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரம் பதிவுசெய்யும்போது அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கப்பட்டது என்றும், யாரிடம் வாங்கப்பட்டது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கிரைய பேச்சுவார்த்தையின்போது நான் உடன் இருந்ததாக எனது வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான்.

5. தாவாச் சொத்தை இராமச்சந்திரன் அவரது சொந்த பணத்தை கொண்டு வாங்கினார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நிரூபணவாக்குமூலத்தில் பக்கம் 2 வரி 12 முதல் நான் சொல்லியுள்ள விபரங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத விபரங்கள் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பிரதிவாதி அனுபவத்தில் உள்ளதற்கு ஏதாவது ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை.

6. தாவாச் சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு இராமச்சந்திரன் பெயரில் வீட்டுவரி இரசீது மற்றும் மின்இணைப்பு இரசீதை பார்த்துள்ளேனா என்றால்

பார்க்கவில்லை. தாவாச் சொத்து வாதி சங்கத்தின் அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும், நான் பிரதிவாதிக்கு வேண்டப்பட்டவர் என்பதால் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.